உ
சிவமயம்



மஞ்சத்தடி இணுவிலை பிறப்பிடமாகவும்
வழக்கம்பரை தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி இராமமூர்த்திப்பிள்ளை பவானியம்மா அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

06.03.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்னை
மடியில்
04
07
1936



இறைவன்
திருவடியில்
19
02
2021

அமரர்

# திருமதி இராமமூர்த்திப்பிள்ளை பவானியம்மா

அவர்களின்

புனிதமான ஆத்மாவை நாங்கள் ஆண்டாண்டுதோறும் போற்றிப் பூசிப்பதற்கான

## திதி வெண்பா

'சீரோங்கு சார்வரி வருட மாசித் திங்கள்
பூர்வ பக்க அட்டமி தன்னில் பார்புகழ்
இராமமூர்த்தி துணைவியாம் பவானியம்மா
சிவபதம் நல்கிய நன்னாள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாலென் வயிற்றின் அகம்படியே
துடரோடு துடக்கி முடக்கியிட
வாற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொலிபெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணிகொடியெம் ஈசனே உன்னை
தொண்டனே இசையுமாறிசையே!

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்
அடியின் கீழ் இருக்கவென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யான்உன்னை பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முக்கண்ணான் மாறனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தம ஞானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தக ஞானசற் கினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
சிற்சபேசா சிவ சிதம்பரம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி இராமமூர்த்திப்பிள்ளை பவானியம்மா அவர்களின் வாழ்க்கைப்பயணம்

குபேர பூமி என்றும், சிவபூமி என்றும் அழைக்கப்படும் ஈழமணித் திருநாட்டின் வடபாலமைந்த யாழ் குடாநாட்டின் மத்தியில் அமைந்தது இணுவில் என்கின்ற தெய்வீகப் பகுதியாகும். சைவத்தையும் தமிழையும், இசையையும் வளர்த்த பல சான்றோர்கள் பிறந்த இப்புண்ணிய பூமியில் இசை வளர்த்த அமரர் திரு.கந்தசாமிக்கும் அமிர்தாச்சிக்கும் 1936ம் ஆண்டு ஆடி மாதம் 04ம் திகதி இணுவில் மஞ்சத் தடியில் மகளாகப் பிறந்தவர் பவானியம்மா ஆவார்.

இவர் மணப்பருவம் எய்தியதும் இந்தியாவின் தஞ்சாவூரில் பிரபல நாதஸ்வர வித்துவானாக விளங்கிய அமரர் திரு.ஆறுமுகம்பிள்ளைக்கும் அவர்தம் துணைவியார் அமரர் திருமதி அம்மாக்கண்ணு அம்மாளுக்கும் பிறந்த 3வது மகனாகிய யாழ்ப்பாணத்தின் பிரபல நாதஸ்வர வித்துவானாக விளங்கிய இராமமூர்த்திப்பிள்ளை அவர்களை 1949ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். இல்லறத்தின் பெரும் பயனாக இத்தம்பதியினருக்கு இராசலட்சுமி, ஸ்ரீரஞ்சினி, பத்மாவதி, சீதாலட்சுமி, சுசிலாதேவி, வனஜா, சிவகுமார், லலிதா ஆகிய எட்டுப் பிள்ளைகளைப் பெற்று இனிதே வாழ்க்கை நடாத்திவந்தார். பிள்ளைகள் யாவருக்கும் நல்ல கல்வியை ஊட்டி மணப் பருவம் எய்திய பிள்ளைகளுக்கு கால காலத்தில் திருமணமும் செய்து வைத்து மகிழ்ந்தனர்.

காலப்போக்கில் ஏற்பட்ட உடற்சுகயீனம் காரணமாக 1986ம் ஆண்டு தனது 65வது வயதில் இராமமூர்த்திப்பிள்ளை காலமானார். இவரது மறைவிற்குப் பின்னர் அதிகரித்த வறுமை நிலை பவானியம்மாவின் மன உறுதியை மேலும் வலுவுறச் செய்தது. தனது பிள்ளைகளுக்கு தந்தைக்குத் தந்தையாகவும் தாய்க்குத் தாயாகவும் இருந்து சிறு சிறு தொழில்களைச் செய்து அதில் இருந்து பெற்ற வருமானங்களைக் கொண்டு தனது குடும்பத்தை நடாத்தியும் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கணவரின் இறப்பினைத் தொடர்ந்து பல சிரமங்களுக்கு மத்தியிலும் தமது குலத் தொழிலைக் கைவிடக்கூடாது என்பதற்காக தனது ஏகபுத்திரனான சிவகுமாரின் இசைப் பயணத்திற்கான வழிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். தாயாரின் இப்பெரும் முயற்சிகளுக்குப் பலனாக சிவகுமார் அவர்கள் இன்று பிரபல நாதஸ்வர வித்துவானாக ஈழம் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளிலும் தனது இசைப் பயணத்தினை மேற்கொண்டு வருகின்றார். "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற வள்ளுவனின் வாக்கிற்கு இணங்க தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற பவானியம்மா, தான் சிவகுமாரினை பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியை விட பெரிதும் மகிழ்ந்தார்.

நல்ல ஒழுக்க சீலர்களாக தனது பிள்ளைகளை வளர்த்தெடுத்த பவானியம்மா இராசலட்சுமி, ஸ்ரீரஞ்சினி, பத்மாவதி, சுசிலாதேவி, வனஜா, சிவகுமார், லலிதா போன்றவர்களுக்கு முறையே வீராச்சாமி, துரைராசா,பியவர்த்தனா, கோணேசன், சிவகுமார், சுமஞ்சனாதேவி, சபேசன் போன்றவர்களை மணம் முடித்து வைத்ததுடன் பேரப்பிள்ளைகளையும், பூட்டப்பிள்ளைகளையும் பிள்ளைகளுக்குச் சமமாக வளர்த்தெடுத்தார்.

காலப்போக்கில் ஏற்பட்ட உடற்சுகயீனம் காரணமாக சில வருடங்கள் தனது மகனின் அரவணைப்பில் இருந்து வந்தார். எனினும் நோய் நொடி இல்லாமல் படுக்கையிற் கிடந்து உழலாமல் தமது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், அயலவர்கள் கதறிக் கண்ணீர்க் கடலில் தத்தளிக்கையில் அக்கணமும் அம்மையார் பொன் சிரிப்புடன் தனது 85வது வயதில் 2021ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி காலை 11.00 மணியளவில் இறைவன் திருவடியை நோக்கி தனது பயணத்தை மேற்கொண்டு விட்டார். "இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பார் என்று எண்ணவோ திடம் இல்லையே" என்று பாடிய தாயுமானவரின் பாடலினை நிரூபித்துக் காட்டி விட்டார் அம்மையார் அவர்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

## காப்பு

தாரமர் கொன்றையும் செண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே! உலகேழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் எந்தன் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்கக் கட்டுரையே.

## நூல்

1. உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழுத்துணையே

2 துணையும், தொழும்தெய்வமும் பெற்றதாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும் பதிகொண்ட வேரும்பனி மலர்ப்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென் பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே

3.அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே,. திருவே! வெருவிப்
பிறிந்தேன், நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநரகுக்கு உறவாய மனிதரையே!

4. மனிதரும், தேவரும், மாயா முனிவரும், வந்து சென்னிக்
குனிதரும், சேவடிக்கோமளமே! .கொன்றை வார்சடைமேல்
பனிதரும், திங்களும், பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்மென்புந்தி எந்நாளும் பொருந்துகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பொருந்திய முப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையால்,
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதுக்கிய அம்பிகை அம்புயம் மேல்
திருந்திய சுந்தரி, அந்தரி, பாதம் என் சென்னியதே.

6. சென்னியது உன்பொற் திருவடித்தாமரை. சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப் பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி, முறை முறையே
பன்னியது, என்றும் உந்தன் பரமாகம பத்ததியே

7. ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி, தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும், வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய். சிந்துரானன சுந்தரியே!

8. சுந்தரி, எந்தை துணைவி, என் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தினாள், மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

9. கருத்தன, எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால் அழும் பிள்ளைக்கு நல்கின, பேர் அருள்கூர்
திருத்தன பாரமும், ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்,
முருத்தன மூரலும், நீயும், அம்மே! வந்து என்முன் நிற்கவே

10. நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை,
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள்! எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே! இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியாமுத்தி ஆனந்தமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஆனந்தமாய், என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான்ந்தமான, சரணார விந்தந் தவளநிறக்
கானம்ந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே.

12. கண்ணியது உன் புகழ், கற்பது உன் நாமம், கசிந்துபக்தி
பண்ணியது உன் இரு பாதாம் புயத்தில், பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து. நான்முன்செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே! புவி ஏழையும் பூத்தவளே!

13. பூத்தவளே! புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

14. வந்திப்பவர் உன்னை, வானவர் தானவர் ஆனவர்கள்,
சிந்திப்பவர், நற்றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப்பர மானந்தர், பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி! நின் தண்ணளியே!

15. தண்ணளிக்கு என்று முன்னே பலகோடி தவங்கள் செய்வார்,
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதி வானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும், அழியாமுத்தி வீடும், அன்றோ?
பண்ணளிக்கும் சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே!

16. கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே, ஒளிரும் ஒளிக்கு இடமே, எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே, வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய வானன சுந்தரவல்லி, துணை இரதி
பதிசய மானது அபசயம் மாக, முன் பார்த்தவர் தம்
மதிசய மாக அன்றோ வாம பாகத்தை வவ்வியதே.

18. வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என் மேல்வரும் போது, வெளிநிற்கவே

19. வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்து என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை, கருத்தினுள்ளே தெளிகின்ற
ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?ஒளிநின்ற கோணங்கள்
ஒன்பதும் மேவி உறைபவளே!

20. உறைகின்ற நின்திருக் கோயில் நின் கேள்வர் ஒரு பக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே?

21. மங்கலை, செங்கலை, சம்முலை யாள், மலையாள், வருணச்
சங்குலை செங்கைச் சகலகலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள், உடையாள்
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள், பசும்பெண் கொடியே!

22. கொடியே, இளவஞ்சிக்கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே, பனி மால் இமயப்
பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே.
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாதான்பர் கூட்டம் தன்னை
விள்ளேன், பரசமயம் விரும்பேன், வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே, உள்ளத்தேவிளைந்த
கள்ளே, களிக்கும் களியே, அளிய என்கண்மணியே.

24. மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் மணிபுனைந்த
அணியே, அணியும் அணிக்கழகே, அணுகாதவர்க்குப்
பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெருவிருந்தே.
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

25. பின்னே திரிந்து, உன் அடியாரைப்பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே. உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே.
என்னே இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.

26. ஏத்தும் அடியவர், ஈரேழ் உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம், கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம் நாறும் நின்தாளிணைக்குகென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே.

27. உடைத்தனை வஞ்சப் பிறவியை, உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை, பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை, நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை, சுந்தரி ! நின் அருள் ஏதென்று சொல்லுவதே?

28. சொல்லும் பொருளும் என, நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே, அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. சித்தியும் சித்தி தரும் தெய்வம் ஆகித் திகழும்பரா
சக்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை அன்றே.

30. அன்றேதடுத்தென்னை ஆண்டுகொண்டாய், கொண்டதல்ல
என்கை நன்றே உனக்கினி நான் என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்றுகை நின் திருவுளமோ
ஒன்றே, பல உருவே, அருவே, என் உமையவளே.

31. உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில்வந்ததிங்
கெமையும் தமக்கன்புசெய்யவைத்தார், இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை, ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை,
அமையும், அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.

32. ஆசைக்கடலில் அகப்பட்டு, அருள் அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே.

33. இழைக்கும் வினைவழியே அடும் காலன் எனை நடுங்க,
அழைக்கும் பொழுதுவந்து, அஞ்சல் என்பாய். அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே.
உழைக்கும் பொழுது, உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே

34. வந்தே சரணம் புகும் அடியாருக்கு, வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்,
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும், பாகமும் பொற்
செந்தேன் மலரும், அலர்கதிர் ஞாயிறும், திங்களுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவம் எய்தியவா, எண் இறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்து மோதராங் கக்கடலுள்
வெங்கட்பணி அணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.

36. பொருளே, பொருள்முடிக்கும் போகமே அரும் போகம் செய்யும்
மருளே, மருளில் வரும்தெருளே, என் மனத்து வஞ்சத்து
இருள் ஏதும் இன்றி ஒளிவெளி ஆகியிருக்கும் உன்தன்
அருள் ஏதறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே.

37. கைக்கே அணிவது கன்னலும் பூவும், கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை, விடஅரவின்
பைக்கே அணிவது பண்மணிக் கோவையும் பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திருவுடையானிடம் சேர்பவளே.

38. பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா, எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.

39. ஆளுகைக்கு, உன்தன் அடித்தாமரைகள் உண்டு, அந்தகன்பால்
மீளுகைக்கு, உன்தன் விழியின் கடை உண்டு, மேல் இவற்றின்
மூளுகைக்கு, என் குறை, நின்குறையே அன்று, முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாணுதலே.

40. வாள்னுதற் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்தி றைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற் கண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்குகெண்ணிய எண்ணம்ன்றோ, முன்செய் புண்ணியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. புண்ணியம் செய்தனமே மனமே. புதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி, நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடு இருக்கப்
பண்ணி, நம் சென்னியின்மேல் பத்மபாதம் பதித்திடவே.

42. இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கைமலை கொண்டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி, நல்லரவின்
படம்கொண்ட அல்குல் பணிமொழி, வேதப் பரிபுரையே.

43. பரிபுரச் சீறடிப் பாசாங்குசை, பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர மேனியள்! தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்குனி பொருப் புச்சிலைக்கை,
எரிபுரை மேனி, இறைவர்செம் பாகத்து திருந்தவளே.

44. தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே, அவர்தமக்கு கன்னையும் ஆயினள், ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்,
துவளேன், இனியொரு தெய்வம் உண்டாகமெய்த்தொண்டு செய்தே.

45. தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது, துணிந்தச்சையே
பண்டு செய்தார் உளரோ, இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ, அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின்வெறுக்கை அன்றே.

46. வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியது அன்றே, புது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யானு உன்னை வாழ்த்துவனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும்படி அன்று, வேலை நிலம்
ஏழும், பருவரை எட்டும், எட்டாமல் இரவு பகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

48. சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து, நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போதருப்பார், பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே?

49. குரம்பை அடுத்து குடி புக்க ஆவி, வெங் கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது, வளைக்கை அமைத்து
அரம்பையடுத்து அரிவையர் சூழவந்து, அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய் நின்ற நாயகியே.

50. நாயகி நான்முகி, நாராயணி, கை நளின பஞ்ச
சாயகி சாம்பவி, சங்கரி, சாமளை, சாதி நச்சு
வாய்கி, மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று
ஆயகியாதிய உடையாள் சரணம் அரண் நமக்கே.

51. அரணம் பொருள் என்று, அருள் ஒன்று இலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே,
"சரணம் சரணம்" என நின்ற நாயகி தன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும் எய்தார், இந்த வையகத்தே.

52. வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம்,- பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள் அடித்தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும், பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலும், கண்மூன்றும், கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு, இதுபோலும் தவம் இல்லையே.

54. இல்லாமை சொல்லி, ஒருவர்தம் பாற் சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால், ஒருகாலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

55. மின் ஆயிரம் ஒரு மெய்வடி வாகி விளங்குகின்றது
அன்னாள், அகமகிழ் ஆனந்த வல்லி, அருமறைக்கு
முன்னாய், நடு எங்குமாய், முடிவாய முதல்வி தன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும், வேண்டுவது ஒன்றுல்லையே.

56. ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து, இவ் வுலகு எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கிநிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வா. இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும், என் ஐயனுமே.

57. ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு, அண்டம்மெல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும்போற்றி, ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய், இதுவோ, உன் தன் மெய்யருளே?

58. அருணாம் புயத்தும், என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல்லாள், தகைசேர்நயனக்
கருணாம் புயமும், வதனாம் புயமும், கராம் புயமும்,
சரணாம் புயமும், அல்லால் கண்டிலேன், ஒரு தஞ்சமுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. தஞ்சம் பிறிது இல்லை ஈது அல்லது என்று, உன்தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன், ஒற்றை நீள் சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராகி நின்றாய்: அறியார் எனினும்
பஞ்சு அஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.

60. பாலினும் சொல்இனியாய். பனிமா மலர்ப் பாதம் வைக்க
மாலினும், தேவர்வணங்க நின்றோன் கொன்றைவார் சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும், சாலநன்றோ அடி யேன்முடை நாய்த்தலையே?

61. நாயேனையும் இங்கு ஒருபொருளாக நயந்து வந்து,
நீயேநினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய், என்ன பேறு பெற்றேன்
தாயே, மலைமகளே செங்கண் மால்திரு தங்கைச்சியே.

62. தங்கச் சிலை கொண்டு, தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கட் கரி உரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்டநாயகி, கோகனகச்
செங்கைக் கரும்பும், மலரும், எப்போதும் என் சிந்தையதே.

63. தேறும் படிசில ஏதுவும் காட்டி, முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றிற் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம் உண்டு என்று கொண்டாடிய வீணருக்கே.

64. வீணே பலி கவர் தெய்வங்கள் பாற்சென்று, மிக்க அன்பு
பூணேன், உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன், ஒருபொழுதும், திருமேனிப்ரகாசமன்றிக்
காணேன், இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. ககனமும் வானும் புவனமும் காண விற்காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவம்பெரு மாற்குத் தடக்கையும் செம்
முகனும், முந்நான்கு கிரு மூன்றுஎனத்தோன்றிய மூதறிவின்
மகனும்உண் டாயதன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே.

66. வல்லபம் ஒன்றறியேன், சிறியேன், நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லதுபற்று ஒன்றுஇலேன், பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினை யேன்தொடுத்த
சொல் அவ மாயினும், நின்திரு நாமங்கள் தோத்திரமே.

67. தோத்திரம்செய்துதொழுது, மின்போலும் நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை, குலம்,
கோத்திரம், கல்வி, குணம், குன்றி, நாளும் குடில்கள் தோறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழலா நிற்பர் பார் எங்குமே.

68. பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர் விசும்பும்,
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி, சீரடிக்கே
சாரும் தவம், உடையார் படையாத தனம் இல்லையே.

69. தனம்தரும், கல்விதரும், ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும், தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள், அபிராமி கடைக்கண்களே.

70. கண்களிக் கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும், கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. அழகுக்கு கொருவரும் ஒவ்வாத வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ்சே. இரங்கேல், உனக்கென் குறையே.

72. எங்குறை தீரநின்று ரேத்துகின்றேன், இனி யான்பிறக்கின்,
நின்குறையே அன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர, எம்கோன்சடை மேல்வைத்த தாமரையே.

73. தாமம் கடம்பு, படைபஞ்ச பாணம், தனுக்கரும்பு,
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுதெமக்கென்று வைத்த
சேமம் திருவடி, செங்கைகள் நான்கொளி செம்மை
அம்மை நாமம் திரிபுரை ஒன்றோடிரண்டு நயனங்களே.

74. நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

75. தங்குவர் கற்பகத். தாருவின் நீழலில், தாயர்இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும், பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

76. குறித்தேன்மனத்தில், நின்கோலம் எல்லாம், நின்குறிப் பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி, வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணி பிரான் ஒருகூற்றை, மெய்யில்
பறித்தே குடி புகுதும் பஞ்ச பாணபயிரவியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. பயிரவி, பஞ்சமி, பாசாங் குசைபஞ்ச பாணி, வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர்சண்டி, காளி, ஒளிரும்கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி என்றே
செயிர் அவி நான்மறை சேர் திருநாமங்கள் செப்புவரே.

78. செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி, அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்,
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என் துணைவிழிக்கே.

79. விழிக்கே அருளுண்டு, அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு, அவ்வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களே செய்து, பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே?

80. கூட்டியவா என்னை தன் அடியாரில், கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம்! ஆடகத் தாமரை ஆரணங்கே.

81. அணங்கே. அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்,
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில், வஞ்சகரோடு
இணங்கேன், எனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன் என்கண் நீவைத்த பேரளியே.

82. அளியார் கமலத்தில் ஆரணங்கே. அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுந்தொறும்
களியாகி, அந்தக்கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் இமையோர் எவரும்
பரவும், பதமும், அயிராவதமும், பகீரதியும்
உரவும் குலிகமும் கற்பகக் காவும் உடையவரே.

84. உடையாளை ஒல்குசெம்பட்டுடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை, எங்கள் பெம்மானிடையாளை இங்கென்னை இனிப்
படையாளை  உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

85. பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும், என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு மேனியும், சிற்றிடையும்,
வார்க்கும் குங்குமமுலையும், முலைமேல் முத்துமாலையுமே.

86. மால் அயன் தேட மறைதேட வானவர்தேட நின்ற
காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு
வேலைவெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

87. மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்த, என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால், விழியால் மதனை
அழிக்கும் தலைவர், அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும்படி,  ஒரு பாகம் கொண்டாளும் பராபரையே.

88. பரம் என்றுனை அடைந்தேன், தமியேனும் உன் பத்தருக்குள்
தரம் அன்று இவன் என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம் அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய, போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற,கை யான் இடப்பாகம் சிறந்தவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. சிறக்கும் கமலத்திருவே. நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும், துரியமற்ற
உறக்கம் தரவந்து, உடம்போடு உயிர் உறவு அற்று
அறிவு மறக்கும் பொழுதுதென்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

90. வருந்தாவகை, என் மனத்தா மரையினில் வந்து புகுந்
திருந்தாள், பழைய இருப்பிடமாக, இனி எனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

91. மெல்லிய நுண்ணிடை மின்னையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம்தொழும் அடியாரைத் தொழும. அவர்க்குப்,
பல்லியம் ஆர்த்து எழ வெண்பக டேரும் பதம் தருமே.

92. பதத்தே உருகி நின் பாதத்திலே மனம் பற்றி, உன்றன்
இதத்தே ஒழுக, அடிமை கொண்டாய் இனி, யான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன், அவர் போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

93. நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகிக்கு,
முகையே, முகிழ்முலை மானே, முதுகண் முடிவுயில் அந்த
வகையே பிறவியும், வம்பே, மலைமகள் என்பதும் நாம்,
மிகையே, இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

94. விரும்பித் தொழும் அடியார்விழி நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி, அறிவிழந்து,
கரும்பிற் களித்து, மொழிதடு மாறி முன் சொன்ன எல்லாம்
தரும் பித்தர் ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம் எனக் குள்ளம்வெல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட்டேன். அழியாதகுணக்
குன்றே, அருட்கடலே. இம வான்பெற்ற கோமளமே.

96. கோமளவல்லியை, அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை, ஏதமிலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத், தம்மால்
ஆமள வும் தொழுவார், எழு பாருக்கும் ஆதிபரே.

97. ஆதித்தன், அம்புலி அங்கி, குபேரன், அமரர்தங்கோன்,
போதில் பிரமன், புராரி, முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

98. தை வந்து நின் அடித்தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலை வந்த ஆறும் கரந்தது எங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒரு காலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல் அறியாமடப் பூங்குயிலே.

99. குயிலாய் இருக்கும் கடம்பாட வியிடை, கோல இயன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை, வந்து உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில், கமலத்தின்மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே

100. குழையைத்தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத் திருநெடுந் தோளும், கருப்புவில்லும்
விழையப் பொருதிறல்வேரியம் பாணமும், வெண்ணகையும்
உழையைப் பொருக்கண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி தோத்திரம்



ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வராதிடர்

படிகநிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லா தோகவி

## சகலகலாவல்லிமாலை

வெண்டாமரைக்கன்றி நின்பதம்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகமேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகலகலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாபமயிலே
சகலகலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகலகலாவல்லியே

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலாவல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகலகலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலாவல்லியே

சொல்விற்பனமு மவதான
முங் கல்வி சொல்லவல்ல
நல்வித்தையுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்குமுயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகலகலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகலகலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரிக் காப்பு

### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறியைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்.
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பினைக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருப்பதொரு நாள்வரையில் இசைவொடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம்
துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும்
நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

அமரர் இடர்தீர அமரர் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செஞ்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா! வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக்காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகமொன
நகநக நகநக நகநக நகநன
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேர்இள முலை மார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடிஇணை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க!
நாவில் சரஸ்வதி நல்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனைமயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்!
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடாது ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல் விப்புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்!
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா(க)
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன்குடி வாழ் அழகிய வேலா!
செந்தில்மாமலை உறும் செங்கல்வ ராயா!
சமராபுரி வாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்நா இருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என வறுமைகள் நீங்க!
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு! பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே!
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதும் மனமகிழ்ந்து அருளி
தஞ்சம் என்ற அடியார் தழைத்திட அருள்செய்!
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத் துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தி ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மற்றவர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாத வரைப் பொடிப்பொடி ஆக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து உனதுள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து ணவாகச்
சூரபத் மாவைத் துணித்த கையதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா பேேற்றி! கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில் நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவெம்பாவை

பாடல் எண் : 1

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாடல் எண் : 2

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 3

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் எண் : 4

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
    வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
    கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
    கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
    எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 5

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
    போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
    ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
    சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
    ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 6

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
    நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
    வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
    வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
    ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் எண் : 7

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 8

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 9

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் எண் : 10

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 11

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாட செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 12

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தம் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் எண் : 13

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 14

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 15

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் எண் : 16

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

பாடல் எண் : 17

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 18

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் எண் : 19

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

பாடல் எண் : 20

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்

### திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வா (அ)ழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக நிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடிபோற்றி எந்தையடிபோற்றி
தேசனடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான நாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப்பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந் தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேர்க்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேர்க்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியாளே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வர் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பொற்சுண்ணம்

திருத்தில்லையில் அருளியது

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குன்மின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்தர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமே லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிரானொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும் நாமே

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல மடந்தை நல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்தும் நாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே

தேனக மாமலர்க் கொண்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கண் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிச் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

## மூத்த மகளின் கண்ணீர்க் கதறல்

எங்கே அம்மா சென்றீர்கள்?

கருணை இல்லாக் காலன் அவன் உங்களை கவர்ந்து கொண்டு செல்வதை கடவுளுமா கண்மூடிக் கண்டு கொள்ளவில்லை. முந்நூறு நாள் சுமந்து மூத்தவளாய் பெற்றெடுத்து "பெரியவள்" என்று ஆசையாய் அழைத்த என் அம்மா எங்கே? அம்மம்மா எங்கே என்று ஆற்றுவார் இன்றி அழுது துடிக்கும் என் பிள்ளைகளுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் தவிக்கிறேன். மீண்டுவரமாட்டீர்களா என்ற நப்பு ஆசையில் துடிக்கிறது என்மனம்.

சீரோடும் சிறப்போடும் நாங்கள் வாழ வழிகாட்டியாய் இருந்த என் அன்புத் தாய்க்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்கி எனது அம்மாவின் ஆத்மா சாந்திபெற இறைவனிடம் வேண்டி நிற்கும்!

கண்ணீர் மல்கிய கண்களுடன்
மகள் (பெரியவள்) இராசலெட்சுமி
மருமகள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் ஸ்ரீரஞ்சினி இரங்கல்

சுகமாய்த்தான் இருக்கின்றது அம்மா
உன் மடியினில் தலை சாய்த்த நாட்களை எண்ணிப் பார்க்கையில்
மீண்டும் கிடைத்திடுமோ இந்நாட்கள்......?
உறவென்று ஆயிரம் பேர் இருந்தாலும்
நாம் கண்கலங்கி நிற்கும் போதெல்லாம்
உமைத் தானே நம் கண்கள் தேடி நிற்கும்!
மொத்த அன்பை அள்ளித் தந்த அட்சயபாத்திரமே
மீண்டும் ஒரு பிறப்பு இருந்தாலும்
உன் கருவறையிலேயே பிறக்க வேண்டும்.!

ஸ்ரீரஞ்சினி

## மகள் பத்மாவதி இரங்கல்

கற்றுத் தந்தவளும் நீ!
பற்று வைத்தவளும் நீ
அற்று விடா இனிய நாட்களை
எமக்காக்கி இன்று நீ
அற்றுப் போனது ஏன் அம்மா!
இறைவனடியில் நித்திய இளைப்பாற
பிரார்த்திக்கும் உன் மகள் பத்மாவதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் சீதாலட்சுமி இரங்கல்

அம்மா என்ற அற்புதமான உறவை
காலனவன் நொடிப் பொழுதில் பறித்து விட்டான்!
என் மனமெல்லாம் நிறைந்து நிற்கும் தாயே
பூவுலகிலிருந்து விண்ணுலகம் விரைந்தீர்களோ?
எமை வளமாற உளமாற வாழ்ந்திட
வழிகாட்டிய அன்னையே
உங்கள் ஆத்மா நன்னிலை எல்லாம் பெற்று
இறைவன் திருவடி சேர தினம் பிரார்த்திக்கின்றேன்.!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! சாந்தி!!!

## மகள் சுசிலாதேவி இரங்கல்

ஆயிரம் ஆயிரம் காரணம் சொல்லிச் சொல்லி
தேற்றினாலும் தேறமுடியவில்லை அம்மா
நீ இல்லா நாட்களை கடக்க..........!
அன்பென்ற சொல்லுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவளே
உன் அன்பை பெறவோ அழைத்துச் சென்றான் காலனவனும்.....!
தினமும் பிரார்த்திக்கின்றேன் அம்மா
உன் ஆத்மா சாந்தியடைய................

## மகள் வனஜா இரங்கல்

கடவுள் தந்த அழகிய வாழ்வை
வாழவைத்த என் அன்னையே
மீண்டும் ஒரு முறை பிறப்புண்டேல்
உங்கள் மகளாகப் பிறக்க வேண்டும்!
முந்தித் தவமிருந்து முந்நூறு நாள் சுமந்து
தொந்தி சரிய ஈன்றெடுத்த என் தாயை
நொடிப்பொழுதில் இழந்து தவிக்கும் மகள்!
என் அன்னையின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் இரங்கல்

உயிர் தந்தாய், உடல் தந்தாய்,
உணர்வு தந்தாய், உயர்வு தந்தாய்!
என் உயிர் காக்க தன் ஊண் தந்தாய், ஞானப்பால் தந்தாய்
இறைவர்க்கும் மேலான எனதன்னையே
ஏழேழு பிறவி உண்டெனில்
அது உன் மடியிலென வேண்டிநிற்கின்றேன்!
இறுதி மூச்சு உள்ளவரை உமது பரிவு
என் மீதென உணர்வேன்!
உன் போன்ற அன்னை எவர்க்குமில்லையென
கர்வம் கொண்டு நிற்கின்றேன்!
உன் பாசப் பிணைப்பில் நின்று விடுபட முடியாமல் தவிக்கும்
உனது அன்பு மகன்!
உனது ஆன்மா எமது குலதெய்வத்தாயின்
பாதாரங்களில் நித்திய ஜீவிதமடைய தினம் பிரார்த்திக்கின்றேன்.!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மகன்

## மகள் லலிதா இரங்கல்

சோர்ந்து போய் வந்தாலும் சரி,
நான் தோற்றுப்போய் வந்தாலும் சரி,
எமக்கு ஆதரவாய் இருந்தீரே அம்மா!
வாழ்க்கையில் எவ்வளவு துயரங்கள்
இருந்தாலும் உம் முகம் பார்த்தே
ஆறுதலடைவேனே!
மீண்டும் கிடைக்குமோ உன் தாலாட்டு!
உன் கருவறையே நான் மீண்டும்
மரணித்து ஜனிக்க விரும்பும் கருவறை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன்கள் இரங்கல்

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் ஒளிவிளக்கே!
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும் அத்தை என்னும் அன்னையே!
வாழ்க்கைச் சக்கரத்தில் உயிர் உதிர்வு
நிச்சயமானது என்றெண்ணி
பிரிந்து விட்ட உம் ஆன்மா
நித்திய அமைதி பெற இறைவனை
நிதமும் பிரார்த்திக்கின்றேன்.!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## மருமகள் இரங்கல்

தாயின் பின் மேலான உறவு ஒன்று உண்டென்றால்
அத்தையெனும் தாய் உறவை காட்டிடுவேன்
இனியும் இந்த அன்பு எங்கு கிடைக்குமோ.......?
அத்தை உருவில் தோன்றிய அன்னையின் மறு வடிவமே
நானறிந்து ஒரு போதும் கடிந்ததில்லை நீங்கள்
என் மீது .........!
உம் மகளைப் போல் அன்பை அள்ளித் தந்தீரே.....!
உம் இறுதி மூச்சு வரை என்னைத் தேடியது
நான் செய்த பாக்கியமோ???
எவ்வளவுதான் தத்துவம் பேசினாலும்
என் மனம் தாங்க முடியாமல் தவிக்குதே!
இறைவனிடம் ஆறுதல் தேடுகின்றேன்
மரணம் என்ற ஒன்று மறுக்க முடியாதது
என்பதையும் உணர்கிறேன்.

இறைவனின் திருவடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளை சதுர்த்திகன் இரங்கல்

பூமிக்கு உபகோள் சந்திரன்
அது என்றும் பிரியாத கோள்!
அதே போல் எங்களுக்கு
உபகோளாக எமது அப்பம்மா
என்றும் பிரியாது இருந்தார்.!
அந்த உபகோள் எங்களை விட்டு
பிரிந்து விட்டது!.
இறைவன் தந்தனுப்பிய உடலுயிர்
எம்மை விட்டு மறைந்தாலும்
நினைவுகள் மறையாத எமது
குடும்ப விளக்கின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.!

S.சதுர்த்திகன்

## பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் இரங்கல்

அப்பம்மா, அம்மம்மா என்று அறிமுகம் ஆனவரே!
அப்பா, அம்மா அன்பையும் சேர்த்துத் தந்தவரே!
அம்மாவிற்கு நிகர் என்ற உணர்வினையும்
புதிய மொழியையும் சொல்ல வைத்தவரே!
ஆனுபவத்தால் ஆயிரம் பொன்கதைகள் சொன்னவரே!
ஆயிரம் தான் இருந்தாலும் நீங்கள் வேண்டும் எமக்கு!

ஆயிரம் பேர் இங்குண்டு அன்பு கொள்ள.........
ஆனாலும் மனம் உங்கள் அன்பிற்காகவே ஏங்குகிறது!
ஆயிரம் புத்திமதிகள் அன்புடனேயே கூறுவீர்கள்
ஆயிரம் தவறுகள் நாம் செய்தாலும்!
ஆதரவாய் அரவணைப்பீர்களே நாம் தோற்கும் போதும்!
கோபத்தில் ஏசினாலும் கோடிமுறை அம்மா, அப்பு என்று கூப்பிடுவீர்கள் எம்மை!
கோடி கொடுத்தாலும் அந்தக் குழந்தை மனம் வராது யாருக்கும்
அம்மா என்ற உறவிற்கு உமக்கு நிகர் எவருமில்லை இப்பொழுதும் எப்பொழுதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் நடக்கின்றோம் நீர் சொல்லித் தந்த பாதைகளில்,
நடக்கின்றீர் நீரும் நிழலாய் எம்மோடு!
எமக்குத் தெரிந்து உங்கள் நெடும்பயண நேரம்
சந்தைக்கும் சமையலறைக்கும் இடைப்பட்ட தூரம் தான்!
அடுப்பங்கரையில் அடுப்புகளுக்கு இடையில் எமக்காக தணலானது
விறகு மட்டுமல்ல உங்களது இளமையும்!

பூப்படைந்த வயதினிலேயே பூட்டுப் போட்டார்கள்
உங்கள் கனவுகளுடன்! காலம் சென்ற போக்கில்
கனவுகளும் கனவாகிப் போனதே பூட்டிய நான்கு சுவற்றிற்குள்!

பவானி "அம்மா" என்று அறிமுகமாகி இரத்த பந்தமின்றி உறவு கொள்ள
ஆயிரம் ஆயிரம் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் உமக்குண்டு!
கர்வம் கொள்கின்றோம் நாமும் இது போல் யாரால் வாழ்ந்திட முடியும்
என்பதை எண்ணி!

மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில்
விட்டில்களை விரட்டி விரட்டி
எம்மைக் காப்பதிலேயே முடிந்து போனது அவளது இரவுகள்!
நினைவிருக்கும் சிறு வயதில்
ஆசையாய் ஓடியற்கூழும் எண்ணெய்த் தோசையும்
தந்த நாட்களை எண்ணி ஒடிந்து போகின்றோம் என்று!.

கால ஓட்டத்தில் ஏதேதோ மாற்றங்கள்!
சருகு அடுப்புக்கள், மூக்குப் பேணி தேத்தண்ணீ,
குப்பி விளக்குகள், பாக்கு உரல் ,
சத்தகம், ரங்குப் பெட்டி, தட்டிப்பாய் எல்லாம்.......???
எல்லாம் இறந்து விட்டன உம்மோடு!
இருந்தாலும் நிலைத்து விட்டன
நினைவுகளாய் எம்மோடு!
எம்மைப் பெற்றெடுத்த தாய் அன்பிற்கு நிகரான அன்பை அள்ளித்
தந்தீரே....!
நீர் தந்த அனுபவக்கல்வி ஆயிரம் ஆயிரம் கதை சொல்லும் எமக்கு!
இறைவனிடத்தே உம் ஆத்மா சாந்திபெற நிதமும் பிரார்த்திக்கின்றோம்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள்

1. நாகரஞ்சினி
2. நந்தகோபாலன்
3. அரிகரபுத்திரன்
4. கலைவாணி
5. நந்தகுமார்
6. நந்தீஸ்வரி
7. சத்தியகுமார்
8. ரேவதி
9. சாந்தகுமார்
10. வசந்தகுமார்
11. விசியகுமார்
12. சசிரேகா
13. ராஜ்குமார்
14. பிரதாப்
15. சைலஜா
16. கோகுலன்
17. சிந்துஜன்
18. சாகித்யன்
19. செவ்வந்தி
20. லாவண்யா
21. நிஷாதப்பிரியன்
22. சாருமதி
23. வாண்மதி
24. பைரவி
25. சுருதிகன்
26. சதுர்த்திகன்
27. ராகவர்த்தனி
28. ராகப்பிரியன்
29. பிருந்தாபன்
30. சாரங்கன்
31. கம்சத்வனி

## பூட்டப்பிள்ளைகள்

1. சகானா
2. நதீஸன்
3. சாம்பவி
4. தனுத்ரா
5. தருண்
6. கிருத்திகா
7. நவிஜா
8. வர்ணித்
9. நடேசகாணன்
10. பூஜா
11. ஆரபி
12. அக்ஷயன்
13. ஆற்றலோன்
14. தீபிகா
15. கோவர்த்தனன்
16. சங்கீர்த்தனன்
17. அனுசிஜன்
18. நிதர்சன்
19. ஜானுஜா
20. கனிஸ்ரா
21. பவஹரினி
22. சபரீசன்
23. சைந்தவி
24. சைந்தகுமார்
25. வைஷ்ணஜன்
26. அஸ்வின்
27. சுருதிகா
28. நிரேஷ்
29. மதுமிதா
30. மதனிகா
31. பிரக்ருதன்
32. சஞ்சயன்
33. சாய்சரன்
34. ஆதர்ஷனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி புலோப்பளை அறத்தி கண்ணகா பரமேஸ்வரி ஆலயம்
## பளை

காலா காலமாக எமது ஆலய உற்சவங்களில் எமது ஊர் மக்கள் வந்து சேர்வதற்கு முதலே தனது குடும்பத்துடன் ஆலயத்துக்கு வருகை தந்து தொண்டுகள் பல செய்து விழாச்சிறக்க தன்னாலான அனைத்தையும் செய்வது மட்டுமல்லாமல், தனது மகனான எம்மால் சிவா என செல்லமாக அழைக்கின்ற தனது மகனை அழைத்து வந்து அவரின் விரல் நுணியாலே எம் பெருமாட்டியை குளிர வைக்கும் நாதஸ்வரத்தையும் வழங்கி எம் பெருமாட்டியின் அன்பையும் கிராம மக்களின் அன்பையும் பெற்ற எமது அன்பிற்குரிய அம்மாவின் உறுதிமிகு உடல்மீது ஆராத நோய் சேர்ந்திட இரு விழியும் மூடி எமை உருக்குலைய வைத்தீரே தேம்பி அழுகிறோம்.

உம் ஆத்மா சாந்தியடைய எம் பெருமாட்டியை வேண்டி
நிற்கின்றோம்.

தலைவர் - செயலாளர் - பொருளாளர்
அங்கத்தவர்கள் - இளைஞர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி பளை புலோப்பளை

எமது ஆலயத்தின் மங்கல வாத்தியக் கடமையை நிறைவேற்றுவதற்கு வழிபடுவதற்கு தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள் அயலவர், உற்றார், உறவினர் என அனைவரையும் அழைத்து வந்து பளை ஆச்சிக்கு அரகரோகரா என வழித்து பக்தி பரவசமடைந்து அன்றிலிருந்து இவ்வுலகை விட்டுப் பிரியும் வரை அம்பாளின் தரிசனத்துடனும், அனுக்கிரகத்துடனும் வழிபட்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து வையகத்தினை விட்டு விண்ணுலகம் சென்றடைந்துள்ளார். இவ்வுலகில் பவானியம்மா நீங்கள் புரிந்த கடமைகள் நூறாண்டு வாழ்வுக்கு நிகராகும்.

பவானியம்மா அவர் தம் பிரிவால் துயருற்றிருக்கும் இ.சிவகுமார் குடும்பத்தினருக்கும், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சுற்றத்தார் தமக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சிவபதம் அடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"தேசமான்ய"
சிவஸ்ரீ.ந.பிரபாகரக்குருக்கள் J.P
(குடும்பத்தினர்)
ஆதீன கர்த்தாவும், பிரதம குருவும்
அறத்தி அம்பாள் ஆலயம்
பச்சிலைப் பள்ளி - பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவகுலரத்தினம் குடும்பத்தினரின் புலம்பல்

அன்பிற்கும் பொறுமைக்கும் இலக்கணமாய் திகழ்ந்த
மூர்த்தியரம்மா......
உங்கள் பிரிவை நினைத்து வருந்துகிறோம் எங்கள்
மூர்த்தியரம்மா............
எமது துன்பத்திலும் இன்பத்திலும் உறுதுணையாக இருந்தீரே
மூர்த்தியரம்மா...............
உமது உள்ளத்தில் தம்பியாய் பிள்ளையாய்
பேரப்பிள்ளையாய், பூட்டப்பிள்ளையாய் வாழ்ந்தோம்
மூர்த்தியரம்மா...............
உங்கள் புன்சிரிப்பையும் அன்பான அரவணைப்பையும் எப்போது
காண்போம் என ஏங்கித் தவிக்கிறோம்.
மூர்த்தியரம்மா......
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
மூர்த்தியரம்மா......

ஓம் சாந்தி.

உங்கள் பிரிவால் வாடும்
தவகுலரத்தினம் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்புரம் வழக்கம்பரை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்

தொல்புரம் வழக்கம்பரை அம்மன் மீதும் பளை அம்மன் மீதும் அளவு கடந்த பக்தியோடு வாழ்ந்து மறைந்துள்ள அமரர் பவானியம்மா இராமமூர்த்தி என்பவர் நீண்ட காலமாக எம்மோடு உறவாடி மகிழ்ந்தவர். எங்கள் குடும்பத்தின் ஓர் அங்கமாகவும், உறவாகியும் இருந்தவர் கடந்த 72 வருடங்களாக. குழந்தை ப் பருவத்தில் என்னை நீராட்டி சீராட்டி வளர்த்தவர்.

இவரின் நல் உள்ளமும் நற்குணமும் எமக்கு வழிகாட்டியாகும். இப்பேர்ப்பட்ட ஓர் சிறந்தவர் எம்மை விட்டுப் பிரிந்தது இலகுவில் மறந்து விட முடியாததொன்று.

அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வழக்கம்பரை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

அயல்வீட்டாரும், வளர்ப்பு மகளும்
பேரப்பிள்ளையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனடியே சிந்தித்து சிவலோகப் பேறு பெற்றார்

(ஆ.இராமமூர்த்தி)

நாதப் பெருங்கடலில் நீந்திக் களித்திட
நாதக் குழலினையே கையினில் ஏந்தி
நாபிக் கமலத்தின் துணையினால் காற்றினை
கூட்டியும் குறைத்தும் அளவாக உட்செலுத்தி
சப்த ஸ்வரங்களை எழுப்பும் துளைகளில்
கைவிரல் கொண்டே முறையாக நிலைநாட்டி
அமுதென எழுமிசைத் தேனினைப் பொழிந்திட
பாரி திமிரியெனும் இருபெருங் குழலிலும்
பாரினில் உயிர்கள் இசையினால் வசமாக
பற்பல இராகங்களில் கற்பனை தோன்றவே
கானா மிர்தமும் கச்சிதமாய் வெளிப்பட
மட்டிலா மகிழ்ச்சியில் மனிதரும் தேவரும்
மதிமயங்கி செவிசாய்த்து தலையசைக்க தமிழரின்
சொத்தான மரபிசையைக் குருசீட முறையினிலே
தலைமுறை யாகவே கற்றுச் சிறந்து
இராமனே மூர்த்தியாய் உருவெடுத் தாற்போல
அழகினில் ஆற்றலில் தென்னகத் தென்றலாய்
வழக்கம் பறையினில் வாழ்விட மாக்கிய
ஆறுமுகம் பிள்ளையின் அருந்தவப் புதல்வன்
இராம மூர்த்தியாம் பண்புடைக் கலைஞன்

(பவானியம்மா)

இயற்கை எழில்மிகு இணுவை ஊர்தனில்
மஞ்சத்தடி வாழ்ந்த கந்தசாமி அமிர்தாச்சி
தம்பதிகள் பெற்ற அருந்தவப் புதல்வியாம்
பவானி யம்மாவெனும் பண்புசால் மங்கையை
இல்லறத் துணைவியாய் ஏற்றதன் பயனதால்

(பிள்ளைகள்)

இறைவன் கொடுத்தனன் அருந்தவச் செல்வங்கள்
இராச லட்சுமியும் ஸ்ரீரஞ் சினியும்
பத்மா வதியும் சீதா லட்சுமியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசீலா வனஜா சிவகுமார் லலிதா
ஆகியநற் புதல்வரை பெற்றநற் தாயானாள்

(மருமக்கள்)

மக்களுக் கேற்றநற் றுணைவர் களாகவே
வீராச் சாமியும் துரைராஜா பியவர்த்தனா
கோணேசன் சபேசன் சிவகுமார் சுமஞ்சனா
ஆகியோர் கிடைத்திட, மக்களின் வாழ்விலே

(பேரப்பிள்ளைகள்)

நாகறஞ் சினிநந்த கோபாலன் அரிகரன்
நந்தகு மார்நந்தினி சத்திய குமார் சாந்த
குமார் வசந்தகுமார் விஜயகு மார் பிரதாப
ராஜன் சைலஜா சசிரேகா கோகுலன்
சுஜீவன் சிந்துஜன் சாகித்யன் செவ்வந்தி
லாவண்யா நிசாதப்பிரியன் சாருமதி வான்மதி
பைரவி சுருதிகன் சதுர்த்திகன் ராகவர்த்தனி
ராகப் பிரியன் பிருந்தாபன் சாரங்கன் கம்சத்வனி
கலைவாணி ரேவதியாம் பேரர்கள் கிடைத்தனர்.

(பூட்டப்பிள்ளைகள்)

ஆல மரமாக தழைத்த குடும்பத்தில்
சகானா சாம்பவி நதீசன் பூஜா
கானன் ஆரபி அக்சயன் கிருத்திகா
சைந்தவி தீபிகா ஆற்றலோன் சாயீஸ்வரன்
சஞ்சயன் ஆதர்சனா மதுமிதா மதனிகா
பெயருடை பூட்டன் பூட்டிகள் கிடைத்திடவே

(சிவலோகப் பயணம்)

பாக்கியம் இதுவென பாவனியம் மா வாழ்ந்ததால்
பூரணா னந்தமாய் பூமியில் பிறந்து
புகழுடன் பெருமையாய் வாழ்ந்ததை போற்றினர்
வானவர் பூமழை பொழிந்து வரவேற்றனர்
சிவனடி சிந்தித்தே சிவலோகப் பேறுபெற்ற
பவானியம்மா இனிதே சாந்தியும் பெற்றார்.

சுபம்

23.02.2021 எஸ்.சிவானந்தராஜா

பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீராமஜெயம்

கலாபூஷணம், கலைமாமணி, திருவாசகமணி, சாமஸ்ரீ தேசமானிய, தேசாதய தீபம், விஸ்வகலாஜோதி ,பண்ணிசைப்பாவலன் ,ஆர்மோனிய இசையரசு, கலைஞர்சுவதம், கலைச்சுடர் ,சமூகதிலகம், சமூகமாமணி, சமூககலாவித்தகர், முத்தமிழ்வித்தகர், கீர்த்தி ஸ்ரீ, சிம்மக்குரலோன், சிவபூஜா துரந்தரர்.

DR. **கந்தப்பு லோகேஸ்வரன்** - B.H.M+S C.fy –JP (whole ISLAND)
(அகில இலங்கை சமதான நீதவான்)

தொலைபேசி இல :- 0779531454,0761733085

செந்தூரான் சோலை
பத்தானைக்கேணி தொல்புரம்
சுழிபுரம்.

..................202.....;

## ஓம் ஸ்ரீராம ஜெயம்
## அமரர் திருமதி இராமமூர்த்தி பவானி அம்மா அவர்களின்
## 16வது நாள் நினைவாஞ்சலி

ஈழமணித் திருநாட்டின் மேற்திசையில் பல்கலையும் பல வளமும் அருளும் பொருளும் பொலிந்து விளங்கும் தொல்புரம் என்னும் தொல்லூரிலே முன்னொரு காலத்தில் புகழ்பூத்த நாஸ்வர வித்துவானாக இப் பகுதியிலுள்ள பிரபல்யம் பெற்ற ஆலயங்கள் பலவற்றில் ஆஸ்தான வித்துவானாகவும் திகழ்ந்த ஆறுமுகம்பிள்ளை இராமமூர்த்தி அவர்களின் பாசமிகு துணைவியார் இறையடி சேர்ந்தமையிட்டு மிகுந்த கவலையடைகிறேன்.

இறைவனுக்கு பிரித்தியமான நாதஸ்வரக் கலையில் உலகப் புகழ் வாய்ந்த சிவகுமாரனை இசை உலகிற்கு வழங்கி தாய்க்குரிய ஸ்தானத்திலிருந்து குடும்ப உயர்விற்காக தன்னை அர்ப்பணித்து பொற்புற வாழ்ந்த நிறைவுடன் வைகுண்டத்தினை அடைந்த அம்மையாரது ஆத்மா சாந்திபெற எனது குலதெய்வம் பொன்னாலை ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீ வரதராஜப் பெருமாளை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

Dr.கலைமாமணி க.லோகேஸ்வரன் J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் (பெரியதம்பிரான்)
## பரிபாலனசபை
## சுழிபுரம்

### அஞ்சலி

எமது ஆலய ஆஸ்தான நாதஸ்வர விற்பன்னர் அமரர் ஆறுமுகம்பிள்ளை இராமமூர்த்தி அவர்களின் அன்புத் துணைவியாரும், தற்போதைய ஆஸ்தான நாதஸ்வரக் கலைஞர் நாத இளவல் இ.சிவகுமார் அவர்களின் அன்புத் தாயாரும் ஆஸ்தான நாதஸ்வர கலைஞர்களின் சார்பு நிலைக் கலைஞனான திரு.பி.சாந்தகுமார் அவர்களின் அன்புப் பேர்த்தியுமாகிய அமரர் திருமதி பவானியம்மா இராமமூர்த்திப்பிள்ளை அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களுடனும் வழித்தோன்றல்களுடனும் எமது ஆலய சமூகத்தினரினதும், அடியவர்களினதும் துக்கங்களை பகிர்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி எல்லாம் வல்ல ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமானின் பாதார விந்தங்களை நாடி பணிந்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

| | |
|---|---|
| தலைவர் | செயலாளர் |
| திரு.க.வேலுப்பிள்ளை | திருமதி.ப.கிருஷ்ணவேணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்பட வாழ்ந்த பவானியம்மா

பணிதலைக் கொள்ளல் பாரினில் இன்பம்
பணிபயன் கருதாதாற்றிடல் இன்பம்
பணி முயன்றாற்றி முற்றுறல் இன்பம்
பணி யெலாம் சிவப்பணியாக்கிடல் இன்பம்

முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் பெயர் பெற்ற தொல்புரம் கிராமத்திற்குப் பெருமைகள் பல சேர்த்த ஓர் இசைக்குடும்பத்தின் இனிய தலைவியை இழந்து தவிக்கும் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

இணைபவர்கள் அனைவரையும் அன்பால் அரவணைப்பவராகவும், இசைச் செல்வத்தால் மகிழ்விப்பவராகவும் பிரபல்யம் பெற்று விளங்கும் மகவை வழங்கிய அத்தாயாரையும், நீண்டகாலமாக எமது ஆலய உற்சவ காலத்தில் இசைப்பணியாற்றி எமது கிராமத்தவரின் நன்மதிப்பைப் பெற்றவருமான அமரர்.திருமதி பவானியம்மா இராமமூர்த்தி அவர்களையும் மனதில் நினைந்து இவ்விருவரினதும் ஆன்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தொல்புரம் கொட்டடியம்பதி
ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய
பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

பண்பிலே தெய்வமான இராமமூர்த்தி பவானி அம்மா இராமமூர்த்தி என்னும் அன்பான கணவனுடன் பல பிள்ளைச் செல்வங்களைப் பெற்று பிள்ளைகளை நல்ல பண்புடனும் அன்பாக வளர்த்து அவர்கள் எண்ணம் போல அவர்களுக்கு துணையாக வாழ்ந்து வந்துள்ளார். அவர்களின் நல்ல மனம் போல் நல்ல பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் என்று ஆலமர விருட்சம் போல் அவர்களின் நிழலில் வாழ்ந்து வந்தார்.

தன்னுடைய மகன் சிவகுமாரை நெறி தவறாமல் சிறந்த உலகும் போற்றும் நாதஸ்வர கலைஞனாகவும் அன்பு பண்பு பொறுமை நேர்மை விட்டுக்கொடுப்பு ஒழுக்கம் ஆகிய எல்லாவற்றையும் ஊட்டி வளர்த்தார். சிவகுமாரும் மகன் தாய்க்கு எந்த துன்பமும் கொடுக்காமல் தாயை தெய்வமாக வணங்கி சிறந்த மகனாகவும் சிறந்த நாதஸ்வர கலைஞனாகவும் வாழ்ந்து அவரது குடும்பத்தினரும் 85 ஆண்டு வரை கண் இமை காப்பது போல் காத்து வந்தார்கள். பவானி அம்மாவும் இறுதிவரை இன்முகத்துடன் வாழ்ந்து வந்துள்ளார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வழக்கம்பரை முத்துமாரி அம்பாளை வேண்டி நிற்கும்

திரு வீடியோ
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்கினிய பவானியம்மா என்றும் நீங்காத நினைவுகளுடன்

"அத்தார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

வழக்கம்பரை அம்மன் அருகில் தனது விருந்தோம்பல் பண்பை சிறப்புடன் திளைக்க வைத்து இறைபதம் அடைந்திருக்கும் எமது பவானியம்மா என்றும் போற்றுதற்குரியவர். எல்லோரும் அம்மா என்று அவரைக் கூறுவதற்கு அமைவாக அவரது பெயரும் பவானி அம்மா என்று இருப்பது மிகப் பொருத்தமானதேயாகும். தன்னலமற்ற பொதுநலச்சிந்தனையுடன் தனது கிராமத்து மக்களுடன் ஒற்றுமையாகவும் அவர்களது பிள்ளைகளை தன் பிள்ளைகள் போன்று சீராட்டிப் பாராட்டி வளர்த்தமை யாவரும் கண் ஊடாகக் கண்ட உண்மையாகும்.

சிவகுமார் எனது நண்பர் அவர் மீது நான் வைத்த அன்பின் நிமித்தம் பவானியம்மா என்மீது அன்பு கொண்டு என்னையும் தன்பிள்ளை போல் அன்பு செலுத்தியமை எப்போது நினைக்கும் போதும் இதயம் நிறைவு பெறுகின்றது. உப்புப் போட்டு மிளகாயும் வெங்காயமும் அதற்குள் இட்டு தரும் பழஞ்சோற்றுக் கஞ்சி இப்பொழுது நினைக்கும் போது வாயூறுகின்றது.

"இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்புதல் பொருட்டு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டிய பவளவாய்ச் சொரூபமே பவானியம்மா.

வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையில் வசித்து வரும் பொழுது அவரை எட்டிப் பார்க்கும் தருணங்கள் அளவில்லாது இருந்தது. தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சில் இருப்பதால் அவரைப் பார்த்து அன்போடு கதைக்க முடியாது போய்விட்டது. முகம் பார்த்து கதைக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தது. அதற்கு இறைவனுக்குத்தான் நன்றி கூற வேண்டும். என்னை அன்ரன் மகன் என்று கூப்பிடும்போது இன்னுமொருமுறை கூப்பிடமாட்டாரோ என்ற அவா எனது மனதில் அடிக்கடி தோன்றும். அவ்வளவு பிரியமுடன் ஆசையுடன் கூப்பிடும் ஒலி என் மனதில் இப்பொழுதும் மீட்டுக்கொண்டிருக்கின்றது. எனது மனம் நிறைவு பெறும் உள்ளம் புளகாங்கிதம் அடையும். அப்படியொரு அன்புக்குரிய அம்மாவை நாம் இழந்து தவிக்கின்றோம். அவரது ஆத்மா நிச்சயமாக விரைவில் சாந்தி பெறுவது திண்ணம்.

அவர் தனக்கு நிகரான பண்புடையவரான தனது மகன் சிவகுமாரை எம்மோடு பழகும் இயல்பை எமக்குத்தந்தமை மிகவும் விருப்பத்திற்குரியதேயாகும். எமதன்பு உங்கள் குடும்பத்தோடு என்றும் நீடிக்கச் செய்த எமது பவானியம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் உங்கள் நினைவுடன்
அன்ரன் - பிரான்ஸ் (மா.ஞானேஸ்வரன் - தலைவர்
சின்னக்கதிர்காம தொண்டர் சபை
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு:
04
-
07
-
1936



இறப்பு:
19
-
02
-
2021

**மூளாய் வதிரன்புலோ**

**ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தான ஆஸ்தான வித்துவான்**

**திரு இராமமூர்த்தி சிவகுமார் அவர்களின்**

**அன்புத் தாயார்**

## அமரர் திருமதி

## இராமமூர்த்தி பவானியம்மா

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் ஆஸ்தான வித்துவானாக இருந்து வரும் திரு இராமமூர்த்தி சிவகுமார் அவர்களின் அன்பு அன்னை அமரர் திருமதி இ. பவானியம்மா அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்துள்ளோம். அவர் பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வதிரன்புலோ பதியுறையும் விநாயகப்பெருமானை பிரார்த்தித்து நிற்கின்றோம்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஈரவிழிகளுடன் பிரிவால் துயருறும்
மூளாய் வதிரன்லோ
ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 04 - 07 - 1936 | | 19 - 02 - 2021 |



அமரர்

## இராமமூர்த்தி பவானியம்மா

பொன் மலர்ந்த முகமும்
புன் சிரிப்பும் கொண்டவளே!
மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆளாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ!
கலையாத நினைவுகளுடன் உதியும்
கண்ணீர் கொண்டு அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்த்துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தவில் N நந்தகுமார் குடும்பம்
மானிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
04 ☆ 07 ☆ 1939



ஆண்டவன் அடியில்
19 ☆ 02 ☆ 2021

அமரர்

# இராமமூர்த்தி பவானிஅம்மா

சுழிபுரத்தில் உதித்த தூய சிவக்கொழுந்து
சுந்தரன் பாதம் சேர்ந்தாள்
அழியாப் புகழ்ஆரணி மணிக்கொழுந்து
அம்பிகை பதம் அடைந்தாள்
விழியாய் மைந்தனை விண்ணோங்கப் புகழ
விதைத்த தாயாள் துயின்றாள்
ஒழியா துன்பத்தில் ஊறி வெதும்பி
ஓரிரு துளிகள் உமக்கே

நாத கானப்பிரியனை நானிலம் உவக்க
நயந்த நங்கையர் திலகம்
பாத பூச்சொரிய பார்த்திபன் நெஞ்சம்
பயின்ற மங்கையர் திலகம்
ஓத உவந்த உத்தம கல்வியின்
உருக்கள் தந்த தெய்வம்
வேத நாதனின் பாதம் விரைந்தாள்
உளதோ உளதோ புரியோம்

கண்ணின் மணியாய் கனிந்த சுடர்க்கொடி
மண்ணின் மகளாய் மலர்ந்த மாணிக்கம்
விண்ணின் ராணியாய் வேண்டியே அடைந்தாள்
புண்ணின் சேயாய் புலம்பி வருகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

மார்க்கண்டபிள்ளை இராசேஸ்வரி குடும்பத்தினர்
வட்டுமேற்கு,வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## இராமமூர்த்தி பவானியம்மா

பாசத்தின் உறைவிடமே பண்பின் ஒளிவிளக்கே
உற்றமும் சுற்றமும் கூடிக்களித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ – பிரிவால்
வாடி நிற்கின்ற உள்ளங்களைத்தேற்ற மொழியின்றி
தவிக்கின்றோம் – நின் உறவின்
அடி தேடி துடிக்கின்றோம் ...

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

புவித்துவம் 04-07-1936

அமரத்துவம் 19-02-2021

தவில் KN இராமநாதன் குடும்பம்
மாவடி வட்டுக்கோட்டை

Print Master. T.P : 021 [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்

தோற்றம்
04 ★ 07 ★ 1939

மறைவு
19 ★ 02 ★ 2021







அமரர்

## இராமமூர்த்தி பவானிஅம்மா

ஆன்மீக உணர்வும் அரவணைக்கும் பண்பும்
மாண்புமிகு மனமும் கொண்ட பவானியம்மா
தேன் இனிக்கும் கதைகளை யாவருக்கும்
தெவிட்டாமல் கூறும் திறனுடைய கலைத்தேன்
வான் புகழோங்கி நின்று நிமிர்ந்து
வையகம் வாழ்த்த வாழ்ந்திட்ட அதனதேவி
காண்போர் கண்கலங்க வைத்துவிட்டு
கணப்பொழுதிலே கழலோன் அடி சேர்ந்தீர்

நல்லுள்ளம் கொண்ட பவானியம்மா
நான்கும் போற்ற வாழ்ந்த தலைவி
பல்லிடமெங்கும் கலையை பரப்பி
பலராற்றும் பண்புள்ளத்தாயே
எல்லோரையும் சிவகுமாரனைப்போல்
ஏற்றம்பெற அரவணைக்கும் தேவியே
இல்லம் வரும்போது எமையழைத்து
இனிதே நல்விருந்தூட்டும் பவானியம்மையே

ஆண்டுகள் கூடி அளவளாவி மகிழ்ந்தோம்
ஆனதோர் மனம் நெகிழவைத்தது மரணம்
மாண்டோர் பாரில் மீண்டும் மீளார் என்று
மாபெரும் நீதி கூறினும் பொங்குது மனம்
தீண்டா சொல்லோடு தீந்தமிழ் பண்போடு என்றும்
திருத்தலம் போற்றி ஞானம் நினைத்ததோ பல்கணம்
காண்போர் மனமுருக எம்மை கண்கலங்க வைத்து
கணப்பொழுதினிலே கழலோனடி புகுந்தீர் சரணம்

அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி...ஓம் சாந்தி...ஓம் சாந்தி...

சின்னக்கதிர்காம தொண்டர்சபை
வட்டுமேற்கு,வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
04.07.1936

உதிர்வு
19.02.2021



அமரர்

## இராமமூர்த்தி பவானியம்மா

மரணமே நீ ஏன் மரணிப்பதில்லை
மாசற்ற மனிதர்களை மறையச் செய்யும்
மரணமே நீ ஏன் மரணிப்பதில்லை
கடமையும், சேவையும் அடைமழைபோல்கரை திரண்டோடும்
மண் மறவா மாபெரும் மாணிக்கத்தை
மரணிக்கச் செய்த மரணமே நீ ஏன் மரணிப்பதில்லை
புழுதி படிந்த எம் பூமி பெருமையுடன்
பூத்தெடுத்த அன்புத் தெய்வமே!
ஆன்மாவின் அடிவேரையும் அதிர வைக்கும்
அதிரவைக்கும் உன் பிரிவுச் செய்தி!
நேற்றிருந்தவர் இன்றில்லையெனின் யாரை நாம் நம்புவது

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருறும்
தொல்புரம் வழக்கம்பரை அம்பாள்
விளையாட்டுக்கழகம்

0773275598



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

அமரர்

## இராமமூர்த்தி பவானியம்மா



மலர்வு
04.07.1936

உதிர்வு
19.02.2021

பகிர்ந்து கொள்ளும் உறவுகளின் பாசம்
நெகிழ்ந்து கசிந்து நீராய்ச் சொரியும்
கூடிக்குலாவி மகிழ்ந்ததன் எச்சம்
ஆடிப்போய் அமர வைக்கும்
மெய்யெல்லாம் பொய்யாகும்
மெய்யுணர்வு புரிந்தாலும்
மானிடத்தின் பலவீனம் ரணங்களாகக்
கால வெள்ளத்தால் கரைந்துவிடும்
நேற்றிருந்தாரைத் தேடும் நினைவலையுடன்
நித்தம் தொடரும் வாழ்வு

பிரிவால் துயருறும்

தொல்புரம் வழுக்கம்பரை முத்துமாரியம்மன்
தேவஸ்தான தொண்டர் சபையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்



**பிறப்பு**
**1936 . 07 . 04**

**இறப்பு**
**2021 . 02 . 19**

நாதஸ்வர வித்துவான் திரு.இ.சிவகுமார் அவர்களின்
பாசமிகுத் தாயார்

## அமரர் இராமமூர்த்தி பவானியம்மா

பரிந்த பார்வையில் பண்புள்ளங் கொண்டவர்
ஊரிலுள்ளோர் மீதிலன்பானவர்
புரிந்த நிலையில் பழகிவிடும் தன்மையானவர்
சிரித்த முகத்தினர் சிறந்த நற்கொடையினர்
பட்டென பாரினில் படுத்துறங்கி
சட்டெனக் கண்மூடி சடுதியில் சென்றார்
கிட்ட நின்றோரெல்லாம் எண்ணிக் கலங்கிட
எட்டாவழியது போயினர் 1 போயினர்

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு*
*ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் இறைஞ்சுகின்றோம்.*
*ஓம் சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்
**மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயப் பூசகரும்**
**தொண்டர்களும்**

சந்நிதியான் பிறிண்டேர்ஸ் 0773605009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில் 04 . 07 . 1935

ஆண்டவன் மடியில் 19 . 02 . 2021



வழக்கம்பரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் இராமூர்த்தி பவானிஅம்மா

அன்பும் அடக்கமும் பண்பும் பாசமும்
புன்னகை பூத்த முகமும்
பூப்போன்ற இதயமும் கொண்டு
பண்புடனே சமூகத்தில் திகழ்ந்து
இன்று எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த
அமரர் திருமதி.இராமூர்த்தி பவானி அம்மா
அவர்களுக்கு எமது கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துன்பத்திலுள்ள குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருறும்
ஜெயராமன் குடும்பம்
வடலியடைப்பு.

சாய்ராம் பிறின்டேர்ஸ், சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
04.07.1936

உதிர்வு
19.02.2021



தொல்புரத்தினை சேர்ந்த பிரபல்யம் பெற்ற நாதஸ்வர மேதை
சிவகுமார் அவர்களின் பாசமிகு தாயார்
அமரர்

## இராமமூர்த்தி பவானியம்மா

அவர்கள் இறைவனடி சேர்ந்தார் அவரது குடும்பத்தினருக்கு கட்டிட வேலைகளை மேற்கொள்ளும் பொழுது அம்மையார் என்னுடன் பாசத்துடனும் பண்புடனும் பழகியவராவார் அவரது மரணச் செய்தி கேட்டு மிகுந்த கவலை அடைகிறேன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல குலதெய்வம் தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாளை வேண்டுகிறேன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
**சுப்பிரமணியம் கந்தசாமி குடும்பத்தினர்**
**தொல்புரம் கொட்டடியம்பதி ஆதிமுத்துமாரி**
**அம்பாள் தேவஸ்தான தேர்த்திருவிழா உபயகாரர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 04.07.1936

உதிர்வு 19.02.2021



அமரர்

## இராமமூர்த்தி பவானியம்மா

மௌனங்கள் சூழ்ந்து கொள்ள
மனங்கள் மௌனம் கொள்ள
உங்களைப் பார்த்திருந்த விழிகள்
கண்ணீரால் கரைபுரள
உங்களை இழந்ததால்
எங்கள் மனம் துடிக்குதம்மா
விடியல்கள் அஸ்தமனமாக
விலகிவிட்ட உங்கள்
ஆத்மா சாந்தியடைய
இறைஞ்சுகின்றன இதயங்கள்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
தொல்புரம் வழக்கம்பரை
இந்துவாலிபர் சங்கம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

மலர்வு
04.07.1936



உதிர்வு
19.02.2021

எமது ஆலயத்தின் ஆஸ்தான நாதஸ்வர வித்துவான் திரு.
இ.சிவகுமார் அவர்களின் பாசமிகு தாயார்
அமரர்

## இராமமூர்த்தி பவானியம்மா

அவர்கள் 19.02.2021 வெள்ளிக்கிழமை விநாயகப் பெருமானின் பாதங்களை சரணடைந்தார். அவரின் மறைவு குறித்து நாமும் துயர் கொள்வதுடன் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் அத்மா சாந்தியடைய தொல்புரம் மடத்தடி விநாயகப்பெருமானின் பாதரவிந்தங்களை பணிந்து வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவால் துயருறும்

**தொல்புரம் மடத்தடி பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ள வேண்டிய மருத்துவ விடயங்கள்

1. கறியுப்பு (அயடீன் கலந்தது) ஒரு போதும் வெப்பமான இடத்தில் (அடுப்பிற்கு அருகில்) வைக்கக்கூடாது. குறைந்த வெப்பநிலையில் அயடீன் பதங்கமாவதால் உப்பில் அயடீன் சத்து இழக்கப்படுகின்றது.

2. மரக்கறி எண்ணெய் தற்போது அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் மரக்கறி எண்ணெய் பாவிப்பது அதிகளவு கொலஸ்ரோல் ஏற்பட வழிவகுக்கும். நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என்பனவே கொலஸ்ரோல் குறைவானது.

3. கொலஸ்ரோல் அதிகம் உள்ளவர் முட்டுக்காய்த் தேங்காயினை பாவித்தல் சிறந்தது. ஏனெனில் அவற்றில் உள்ள கொழுப்புச் சத்தின் அளவு குறைவானது.

4. மண்ணெண்ணெய் அருந்தியவர்களை ஒரு போதும் வாந்தி எடுக்க வைக்க வேண்டாம். சவர்க்காரம் தேங்காய்ப்பால் என்பவற்றை அருந்தக் கொடுக்க வேண்டாம்.

5.காச்சலுடன் வரும் வலிப்பினைத் தடுப்பதற்கு.

1. பனடோல் மாத்திரைகளை நிறைக்கு ஏற்றபடி 6 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை வழங்க வேண்டும்.
2. குழந்தையின் உடைகளை வெப்பம் வெளியேறுவதற்காக அகற்ற வேண்டும்.
3. உடலின் கழுத்து, அக்குள், அரைப்பகுதி என்பவற்றை குளிர்ந்த நீரால் துடைக்க வேண்டும்

6. வலிப்பு ஏற்படும் போது

1. வலிப்பு ஏற்பட்டவரை இடதுபக்கமாக சரித்து படுக்க வைக்க வேண்டும்.
2. வலிப்பு உள்ள போது எதனையும் பருகக் கொடுக்க வேண்டாம்
3. கையில் வாயில் இரும்புப் பொருட்களை கொடுக்க வேண்டாம்.
4. 4/5 நிமிடத்திற்கு மேல் வலிப்பு ஏற்படும் போது உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிசவாதத்தினை தடுக்கும் வழிமுறைகள்

1. புகைத்தல், மதுபாவனை என்பவற்றை கைவிடுதல் வேண்டும்.

2. கொழுப்பு குறைந்த உணவினை உள்ளெடுக்க வேண்டும்

3. இரத்த அழுத்தம் (பிறஷர்) குருதியில் வெல்லமட்டம் (சலரோகம்) என்பவற்றை ஆண்டிற்கு ஒருமுறை பரிசோதித்து கொள்ளுங்கள். இரத்த அழுத்தம், சலரோகம் உள்ளவராயின் அவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்.

4. வாரத்தில் 3 தடவை உடற்பயிற்சியில் ஈடுபடுங்கள்.

5. உடல் எடையை சரியான அளவில் பேணுங்கள்.

## இயற்கை மருத்துவப் பயன்கள்
## இதயத்தை பலமாக்கும் எலுமிச்சை..

1. எலுமிச்சைப் பழச்சாறை இளஞ் சூடான தண்ணீரில் கலந்து குடித்தால் வயிறுக்கு மிகவும் நல்லது. செரிமானப் பிரச்சினைகள், குமட்டல், வாந்தி போன்ற சிக்கல்களுக்கெல்லாம் எலுமிச்சைப் பழச்சாறு சரியான நிவாரணி.

2. எலுமிச்சைப் பழச்சாறு குருதி சுத்திகரிப்பானாகவும் செயற்படுகின்றது. அடிக்கடி எலுமிச்சைப் பழச்சாறை அருந்துவதன் மூலம் உடலிலுள்ள தேவையற்ற நச்சுப் பொருட்கள் வெளியாவதுடன் குருதியும் தூய்மையாகிறது.

3. எலுமிச்சைப் பழச்சாறை "லிவர் டானிக்" என்று அழைக்கிறார்கள் மருத்துவர்கள். ஈரலின் செயல்பாட்டை அதிகப்படுத்தி செரிமானத்தை ஆரோக்கியமாக்குவதற்கு எலுமிச்சைப் பழச்சாறு பெரிதும் துணை செய்கிறது.

4. எலுமிச்சையில் சிட்ரஸ் அதிக அளவில் உள்ளது. இதில் அபரிமிதமாக நிரம்பி வழியும் வைட்டமின் "சி" உடலுக்கு பல்வேறு வகைகளில் பயனளிக்கிறது. தினமும் எலுமிச்சைப் பழச்சாறு அருந்துவது தோலைப் பளபளப்பாக்கி உடலுக்கு நல்ல மெருகை அளிக்கிறது. தோலிலுள்ள சுக்கங்களை மாற்றவும், கரும் புள்ளிகளை மறையச் செய்யவும் எலுமிச்சைப் பழச்சாறு பயன்படும். மொத்தத்தில் மேனி அழகிற்கு தேவையாக ஒரு இயற்கை உணவாகவும் இதைக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எலுமிச்சைப் பழச்சாறு உடலை குளிர்ச்சியாக்கும் தன்மை கொண்டது. இதன் மூலம் தோல் எரிச்சல், வெப்ப நோய்கள் தாக்குதல் போன்றவற்றிலிருந்து உடலுக்கு பாதுகாப்பு கிடைக்கிறது.

6.வாய்துர்நாற்றம் இருக்கிறதா? பல்லிலும் ஊனிலும் சிக்கல்கள் இருக்கின்றனவா? எலுமிச்சைப் பழச்சாறைக் கொண்டு மஸாஜ் செய்யுங்கள். பல்லுக்கும், பல் சார்ந்த இத்தகைய நோய்களுக்கும் எலுமிச்சைப் பழச்சாறு நல்ல மருந்து.

7. உடல் எடை இளைக்கவும் எலுமிச்சைப் பழச்சாறு துணை செய்கிறது. ஆச்சரியமாக இருக்கிறதா? தினமும் காலையில் இளம் சூடான தண்ணீரில் எலுமிச்சைச் சாறையும், தேனையும் கலந்து அருந்தி வாருங்கள் மாற்றத்தை நீங்களே உணர்வீர்கள்.

8. உயர் குருதி அழுத்தம் உடையவர்களுக்கு எலுமிச்சை பழச்சாறு மிகவும் நல்லது உயர் குருதி அழுத்தம், தலை சுற்றல் போன்றவை நீங்க இதிலுள்ள பொட்டாசியம் சத்து உத்தரவாதம் அளிக்கிறது. மன அழுத்தத்தைக் கூட எலுமிச்சைப் பழச்சாறு குறைக்கும் என்கின்றனர் மருத்துவர்.

9. காய்ச்சல் ஜலதோஷம் போன்ற நோய்களுக்கும் எலுமிச்சையில் இருக்கும் வைட்டமின் சி நிவாரணம் தருகிறது.

10. மூட்டு வலி, உடல் தசைகளில் வலி போன்றவற்றுக்கு எலுமிச்சைப் பழச்சாறு மருந்தாகிறது. உடலிலுள்ள தேவையற்ற நச்சுத்தன்மை பாக்டீரியாக்கள் போன்றவற்றை வெளியேற்றுவதன் மூலம் உடலுக்கு நலமளிக்கிறது எலுமிச்சைப் பழச்சாறு.

இத்தனை பயன்கள் கொண்ட எலுமிச்சைச் சாறை எப்படி அருந்தலாம்? எவ்வளவு அருந்தலாம், எனும் குழப்பம் இருக்கிறதா? மருத்துவர்களின் ஆலோசனையைப் பாருங்கள்.

எழுபது கிலோவுக்கு அதிகமான உடல் எடை கொண்டவர்கள் முழுமையான எலுமிச்சைப் பழத்தை ஒரு டம்ளர் தண்ணீரில் பிசைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கொள்ளலாம். தினமும் இரண்டு முறை உட்கொள்வது பயனளிக்கும். குறிப்பாக காலையில் குடிப்பது சாலச் சிறந்தது. எழுபது கிலோவுக்கு குறைவான எடை கொண்டவர்களுக்கு அரை எலுமிச்சைச் சாறே போதுமானது. எலுமிச்சை உலகெங்கும் நிறைந்து காணப்படும் பழமாகும். குறைந்த விலையில் எல்லா சத்துக்களும் நிறைந்த பழங்களில் எலுமிச்சையும் ஒன்று.

மனிதர்களுக்கு ஏற்படும் பலவித நோய்களை குணமாக்கும் சர்வரோக நிவாரணியாக எலுமிச்சை திகழ்கிறது. முதன் முதலாக 1784ல் கார்ஸ்வில் ஹெம்ஷீலி என்பவர் எலுமிச்சையில் சிட்ரிக் அமிலம் இருப்பதைக் கண்டுபிடித்தார் மருத்துவர் ப்ளென்னின் (1875) ஆராய்ச்சியில் கெட்ட இரத்தத்தை தூய்மை படுத்தும் மருத்துவர்களில் எலுமிச்சையை விட சிறந்தது வேறு இல்லை என கண்டறிந்தார்.

## APJ Abdul Kalam இன் பொன் மொழிகளின் தொகுப்பு

1. நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்.!
ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.
2. அழகைப் பற்றி கனவு காணாதீர்கள்,
அது உங்கள் கடமையைப் பாழாக்கி விடும்!
கடமையைப் பற்றி கனவு காணுங்கள்,
அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்!
3. ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என உணரும் தருணத்தில்
புத்திசாலியாகிறான்!
ஒரு புத்திசாலி தன்னை புத்திசாலி என்று பெருமை கொள்ளும் கணத்தில்
முட்டாளாகிறான்.!
4. நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.
5. உன் கை ரேகையைப் பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே!
6. கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல!
உங்களைத் தூங்க விடாமல் செய்வது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே!
அது உன்னைக் கொன்று விடும்.
கண்ணை திறந்து பார்!
நீ அதை வென்று விடலாம்!

8. இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது ஆனால் அந்த பக்கத்தை இந்த உலகையே படிக்க வைப்பது உங்கள் கைகளில் தான் உள்ளது.!

9. நம் அனைவருக்கும் ஒரே மாதிரியான திறமை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரியான வாய்ப்புக்கள் உள்ளன.

10. வாய்ப்பிற்காக காத்திருக்காதே!
உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக் கொள்!

11. உலகம் உன்னை அறிவதை விட உன்னை
உலகிற்கு அறிமுகம் செய்து கொள்!.

12. சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.

## 2ம், 3ம், 4ம், தலைமுறையினரைக் குறிக்கும் உறவுமுறைப் பெயர்கள் – ஒரு வரலாற்று நோக்கு

உறவுமுறைப் பெயர்கள் தொடர்பான ஆய்வு பல இடம்பெற்றிருந்த போதிலும் அதனுடைய தொன்மையை வரலாற்றுப் பின்னணியில் வழங்கியவர்கள் மிக அரிய சிலரே ஆவார். பாரம்பரிய உறவு முறைகள் தொடர்பான ஆய்வு ஒன்றில் குறித்த உறவுமுறைப் பெயர்களின் பாரம்பரியமானது இலக்கிய, தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் நிறுவப்படும் போது அதனது தொன்மை வரலாறு சான்றுகளின் அடிப்படையில் உறுதி செய்யப்படுகின்றது. அந்த வகையில் ஒவ்வொரு உறவுமுறைப் பெர்களினதும் வரலாற்று ரீதியான தொடர்ச்சியினை ஆராய்வது சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புசநயவ புசயனெ ீயசநவெள" மற்றும் "புசயனெ ீயசநவெள" என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் உறவுமுறைப் பெயர்கள் முறையே 3ம், 4ம், தலைமுறையினரையும், 2ம் தலைமுறையினரையும் குறித்து நிற்பதுடன் இவ் உறவுமுறையினர் தமிழில்.

1. தாத்தா - பாட்டி
2. அப்பப்பா - அப்பம்மா, அப்பாச்சி
3. அம்மப்பா - அம்மம்மா, அம்மாச்சி
4. பாட்டன் - பாட்டி
5. முப்பாட்டன் - முப்பாட்டி
6. பூட்டன் - பூட்டி
7. எள்ளுப்பாட்டன் - எள்ளுப்பாட்டி
8. கொள்ளுப்பாட்டன் - கொள்ளுப்பாட்டி
9. பேரனார் - பேர்த்தியாள்

போன்ற பல பெயர்களினால் அழைக்கப்படுவது சிறப்பிற்குரியதாகும். இதில் பூட்டன் - பூட்டி 3ம் தலைமுறையினராகவும் ஓட்டன் - ஓட்டி 4ம் தலைமுறையினராகவும் கொள்ளப்படுகின்றனர். குமரி மாவட்டத்தில்.

"ஓட்டன் கண்டா உறவு அத்துப்போகும்"
"ஓட்டி கண்டா உறவு அத்துப் போகும்"

என்ற பழமொழிகள் வழங்கப்படுகின்றன. அதாவது நான்கு தலைமுறைக்குப் பின் யாரும் வாழ்வதில்லை என்பதே பொருள்.

மகன், மகள் - அப்பா, அம்மா, - தாத்தா, பாட்டி - பூட்டன், பூட்டி - ஓட்டன், ஓட்டி என்ற வகையிலேயே இங்கு உறவுமுறை அமைந்து கொள்ளும். அத்தோடு தாயின் பெற்றோர் அம்மப்பா, அம்மம்மா, அம்மாச்சி போன்ற சிறப்புப் பெயர்களாலும், தந்தையின் பெற்றோர் அப்பப்பா, அப்பம்மா, அப்பாச்சி போன்ற சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றனர்.

அப்பு, ஆச்சி, பாட்டன், பாட்டி, தாத்தா போன்ற பெயர்களால் 2ம், 3ம், 4ம், தலைமுறையினர் பொதுவாக அழைக்கப்படுவதனை தற்காலங்களில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம், 3ம், 4ம், தலைமுறையினரைக் குறிக்கும் பெயர்கள் தனித்துவமான வகையில் சங்ககாலப் பரப்பில் இடம்பெறவில்லை (சித்திரபுத்திரன்:2002:75) "தந்தைக்குத் தந்தை" போன்ற வகையிலேயே சுட்டிக் காட்டப்பட்டிருப்பதனை இலக்கியக் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையிலும் நிறுவ முடியும் குறிப்பாக,

"நுந்தை தந்தைக்கிவன் தந்தை தந்தை" (புறம் 290-3)

எனும் இலக்கியச் சான்றினையும் சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களான புகழூர் கல்வெட்டுக்களில் வருகின்ற,

"கோ ஆதன் செல்லிரும் பொ(று)றை மகன்
பெருங்கடுங்கோன் மகன் (இ) ளங்
கடுங்கோளங்கோ ஆக அறுத்தகல்"

போன்ற குறிப்புக்களின் ஊடாக பெற்றோரின் மூத்த தலைமுறையினர் தனித்துவமான பெயர்களால் சங்ககாலப் பரப்பில் சுட்டப்படவில்லை என்பதனை எடுத்துக் காட்ட முடிகின்றது. பரிபாடல் நூலில்,

"மட நடனப் பாட்டியர்த் தப்பித் தடையிறந்து" (பரி.10-37) என்ற குறிப்பு இடம்பெறுகின்ற போதிலும் அது கிழவி எனும் பொருளிலே இடம்பெற்று இருப்பதுவும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கதாகும்.

சங்ககாலப் பரப்பில் 2ம், 3ம், 4ம் தலைமுறையினர் சிறப்புப் பெயர்களால் சுட்டப்படவில்லை என்றாலும் பிற்கால பல்லவ பாண்டிய சோழர் காலங்களினைத் தொடர்ந்து 18ம், 19ம் நூற்றாண்டு வரையிலும் தனித்து அடையாளப்படுத்தப்பட்டு இருப்பதனை சான்றுகள் உறுதி செய்கின்றன. குறிப்பாக,

1. "எந்தை தந்தை தம் மூத்தப்பன்
ஏழ்படி கால் தொடங்கி" (நாலா)
2. "மூதாதை மூதாளும் பாகத்து" (திருவா:5,30)
3. "உங்கள் பேரனார் தம் மாசுடை" (பெ.பு.60)
4. "தந்தை தாயே பாட்டன் பாட்டி முந்துற" (ப.பா:179)
5. "ஆத்தாளை எங்கள் அபிராம" (அந்)

போன்ற இலக்கியக் குறிப்புக்களில் மூத்தப்பன், மூதாதை, பாட்டன், பாட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரனார் போன்ற பெயர்களும் சோழர் காலக் கல்வெட்டுக்களான,

1. "எங்கள் ஆச்சி வேட்டுவன் ஆச்சபிடாரி" (SII/VIII/)
2. "உத்தம சோழ தேவர் தங்களாச்சியார்" (SII/XIII/144)
3. "ஸ்ரீ விக்ரம சோழ தேவற்கு யாண்டு...
   ராஜராஜ பல்லவராஜனுக்குத் தன் பாட்டன்"

வழக்கிழந்து போகவும் திரிபடைந்து போகவும் புதிய முறைப்பெயர்கள் உள்வாங்கப்படவும் காரணமாயிருந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. கடந்தகால சமுதாயத்தின் பிரதிபலிப்பாகக் காணப்படும் உறவுமுறைப் பெயர்கள் வரலாற்றுப் பெறுமதி, சமுதாயப் பெறுமதிகளைக் கொண்டிருக்கின்றன. அதாவது பாரம்பரிய உறவுமுறைப் பெயர்கள் கடந்தகால மொழியியல் ஆய்விற்கு ஆதாரமாகவே காணப்படுகின்றன. உதாரணமாக இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் இடம்பெறுகின்ற மருமகனைக் குறிக்கின்ற உறவுமுறைப் பெயர்கள் சமகால மொழியியல் பொறுத்து மேலும் சில உண்மைகளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பண்டைய சமூகம் உறவுமுறைப் பெயர்களுக்கு வழங்கிய முக்கியத்துவத்தை தற்கால சமூகம் வழங்க பின்நிற்கிறது வேதனைக்குரிய விடயமாகும். இதனாலேயே உறவுமுறைப் பிறழ்வுகளும் ஏற்பட்டுக் கொள்கின்றன. எமது அன்றாட வாழ்க்கையில் நாம் தினமும் பயன்படுத்தி வருகின்ற உறவுமுறைப் பெயர்களின் வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்ளாமல் இருத்தல், கூட்டுக்குடும்பம் கருக்குடும்பமாகுதல், நவநாகரிகமோகம், உலகமயமாக்கம் போன்றன குறித்த பாரம்பரிய உறவுமுறைப் பெயர்கள் வழக்கிழந்து செல்வதற்கான காரணிகள் ஆகும். கடந்தகால சமுதாயத்தின் பிரதிபலிப்பாகக் காணப்படும் உறவுமுறைப் பெயர்கள் பாரம்பரியத்தை எமது அடுத்த சந்ததிக்கும் மொண்டு சேர்ப்பது எமது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Chart of Grammar Tenses

| | Simple | Continuous | Perfect | Perfect Continuous |
|---|---|---|---|---|
| Present | + $V_{1(s/es)}$<br>-do/does not $V_1$<br>?Do/Does _ + $V_1$<br><br>I eat<br>He eats<br>We eat | + am/is /are + Ving<br>-am/is/are not+Ving<br>?Am/Is /Are _ + Ving<br><br>I am eating<br>He is eating<br>We are eating | + have/has + $V_3$<br>- have /has not $V_3$<br>? Have /Has _ + $V_3$<br><br>I have eaten<br>He has eaten<br>We have eaten | +have/has + been + $V_{ing}$<br>-have/has not+been+ $V_{ing}$<br>?Have/Has _+been + $V_{ing}$<br><br>I have been eating<br>He has been eating<br>We have been eating |
| Past | + $V_2$<br>-did not + $V_1$<br>? Did _ + $V_1$<br><br>I ate<br>He ate<br>We ate | + was /were + Ving<br>-was/were not+Ving<br>?Was/Were _ + Ving<br><br>I was eating<br>He was eating<br>We were eating | + had + $V_3$<br>- had not + $V_3$<br>? Had _ + $V_3$<br><br>I had eaten<br>He had eaten<br>We had eaten | + had + been + $V_{ing}$<br>-had not + been + $V_{ing}$<br>? Had _ + been + $V_{ing}$<br><br>I had been eating<br>He had been eating<br>We had been eating |
| Future | + will + $V_1$<br>- will not + $V_1$<br>? Will _ + $V_1$<br><br>I will eat<br>He will eat<br>We will eat | +will + be + Ving<br>-will not be + Ving<br>? Will _ be + Ving<br><br>I will be eating<br>He will be eating<br>We will be eating | + will + have + $V_3$<br>- will not + have + $V_3$<br>? Will _ have + $V_3$<br><br>I will have eaten<br>He will have eaten<br>We will have eaten | +will + have+been +$V_{ing}$<br>-will not+have+been+$V_{ing}$<br>?Will _ have+ been +$V_{ing}$<br><br>I'll have been eating<br>He'll have been eating<br>We'll have been eating |
| Future in the Past | +would + $V_1$<br>-would not + $V_1$<br>?Would _ + $V_1$<br><br>I would eat<br>He would eat<br>We would eat | +would + be + Ving<br>-would not+be+ Ving<br>? Will _ + be + Ving<br><br>I would be eating<br>He would be eating<br>We would be eating | + would + have + $V_3$<br>-would not+ have + $V_3$<br>? Would _ + have + $V_3$<br><br>I would have eaten<br>He would have eaten<br>We would have eaten | +would+have+ been+$V_{ing}$<br>-would not+have+been+$V_{ing}$<br>?Would _+have+been+$V_{ing}$<br><br>I'd have been eating<br>He'd have been eating<br>We'd have been eating |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்*
*உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"*

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய், பண்பின் உறைவிடமாய் இருந்து எல்லா உள்ளங்களையும் புன்சிரிப்புடன் கூடிய இனிய வார்த்தைகளால் கவர்ந்து எல்லோர் உள்ளத்திலும் இடம் பிடித்துக் கொண்ட எமது குலவிளக்கு அமரர் திருமதி இராமமூர்த்திப்பிள்ளை பவானியம்மா அவர்களின் ஆத்மா இறைவன் திருவடியில் சங்கமித்த வேளையில் எம் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும், தோரணங்கள் கட்டி தெருவை அலங்கரித்தவர்கட்கும், கண்ணீர் அஞ்சலிகளை அச்சிட்டு தமது காணிக்கை ஆக்கியோர்களுக்கும், உணவு தேனீர் வழங்கி உதவியவர்களுக்கும், நேரில் தொடர்பு கொள்ள முடியாமையால் நிதியுதவி வழங்கியவர்களுக்கும், நேரிலும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, தந்தி, சமூக வலைத்தளங்கள் மற்றும் பத்திரிகைகள் மூலமாகவும் ஆறுதல் கூறிய அனைவருக்கும், பூமாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கட்கும், அஞ்சலிப் பதாதைகளை அச்சிட்டு வழங்கியோருக்கும், மயாணம் வரை வந்து துக்கம் தெரிவித்த அனைவருக்கும், கிரியைகள் நடாத்திய குருமார்களுக்கும், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், இம்மலரினை அழகுற அச்சிட்டு வழங்கிய அச்சகத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் எம் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
இ. சிவகுமார்
(நாதஸ்வர வித்துவான்)
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.0776915339